செ.வெ.எண்.171 நாள்.18.04.2017

**<u>காஞ்சிபுரம் மாவட்டம்</u>**

**<u>செங்கல்பட்டு கோட்டம் , செங்கல்பட்டு வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சீமை கருவேல மரங்கள் வேருடன் அகற்றும் பணியை மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நிதிபதி திரு.ஆர்.செல்வகுமார் அவர்கள் பார்வையிட்டார்.</u>**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சீமை கருவேலன் மரங்களை அகற்றும் பணி மாவட்டம் முழுவதும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. காஞ்சிபுரம் நெம்மேலி பெரிய ஏரியில் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணியை முன்பு பார்வையிட்ட மாவட்ட அமர்வு நீதிபதி இன்று செங்கல்பட்டு கோட்டம், செங்கல்பட்டு வட்டத்திற்குட்பட்ட நெடுங்குன்றம் மண்ணிவாக்கம் பகுதிகளில் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணியை பார்வையிட்டார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்களும் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணியை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். இப்பணியில் அரசுத்துறைகள் மட்டுமின்றி அரசு சாராத இயக்கங்களையும், தொண்டு நிறுவனங்களையும், பொதுமக்களையும் அதிக அளவில் ஈடுபடுத்தி பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொண்டு மற்ற மாவட்டங்களுக்கு முன்னோடியாக காஞ்சிபுரத்தில் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். மேலும் பட்டா நிலங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை உடனடியாக அகற்றுவதற்கு நில உரிமையாளர்களுக்கு உத்தரவிட வேண்டும். அவ்வாறு அகற்றாதவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், சீமை கருவேலன் மரங்கள் அகற்றும் பணி தொடர் பணியாக இருப்பதால் அனைத்து துறை அலுவலர்களும் தொடர்ந்து கண்காணித்து விரைந்து பணிகளை முடிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.பன்னீர்செல்வம், மதுரை உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆணைய உறுப்பினர் திரு.எஸ்.பி.சுரேஷ்குமார், வட்டாட்சியர் (பொறுப்பு) திருமதி.பாக்கியலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.



செங்கல்பட்டு கோட்டம் , செங்கல்பட்டு வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சீமை கருவேல மரங்கள் வேருடன் அகற்றும் பணியை மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நிதிபதி திரு.ஆர்.செல்வகுமார் அவர்கள் பார்வையிட்டார்.